**கவனிக்க.-** *2016.07.22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

**கவனிக்க.-** *இந்த வர்த்தமானியின் பகுதி VI இல், 2016 ஆம் ஆண்டுக்கான பொலநறுவை நீதாசன வலயத்திற்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1978 - 2016 ජූලි මස 29 වැනි සිකුරාදා - 2016.07.29

*1978 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப் பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 140 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.-** அமீர் அலி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, மே மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, ஓகத்து மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, ஓகத்து மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ.கே.எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## கொழும்பு மாவட்ட நீதிமன்றம்

பிஸ்கல் ஏல விற்பனை

திருத்தப்பட்ட வகையில் 1990 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கடன் மீள் அறவிடும் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மற்றும் அதனுடன் சார்ந்த தீர்வுக் கட்டளை மற்றும் முற்றான கட்டளை தொடர்பான காரணம் ஒன்று

வழக்கு இல. : D.D.R/ 208/ 2014
தன்மை: டி.ஆர்
நடவடிக்கை: சுருக்கம்
பெறுமதி: 13,500,000.00
கொழும்பு மாவட்ட நீதிமன்றம்
எஸ்கீசி இல. 27/ 2016

ஹற்றன் நஷனல் பேன்க் பி எல் சி( முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி)
பதிவு அலுவலகம்: இல. 479 ( முன்பு 481), டி பி ஜாயா மாவத்தை, கொழும்பு 10
கிளை: தலைமைச் செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10

வழக்காளி

எதிர்

ஓமந்த முதலிகே தொன் காமினி ,
இல. 262, கொஜித், பஞ்ச வத்த, ஹிம்புடான

எதிராளி

மேற்படி இலக்கம் கொண்ட வழக்கில் பொலன்னறுவை மாவட்ட நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 2016.04.26 ஆந் திகதிய தீர்ப்பு மேற்படி எதிராளியினால் இங்கு கீழ் காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள் தொடர்பான தொகையை வழக்காளி வங்கிக்கு செலுத்துவதை தவறியுள்ள படியால் 3, 676, 237.74 ரூபா தொகையும், 2014.04.01 ஆம் திகதி தொடக்கம் முழுத் தொகையை செலுத்தி முடியும் வரை 16.5% வருடாந்த வட்டியும், 9,775,560.93 ரூபா தொகையும் 2014.04.01 ஆம் திகதி தொடக்கம் முழுத்தொகையை செலுத்தி முடியும் வரை 16.5 % வருடாந்த வட்டியும், வழக்கு செலவீனங்களும் எதிராளியினால் வழக்காளிக்கு செலுத்த வேண்டும் என கட்டளையிடப்பட்டுள்ளதுடன், குறித்த தொகையை செலுத்துவதற்கு எதிராளி தவறியுள்ளபடியால் இந்நீதிமன்றத்தால் எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள எஸ்கீஸி தடைக்கட்டளை படி என்னால் தடை செய்யப்பட்டுள்ள எதிராளிக்கு சொந்தமான கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட அசையாத ஆதனம்,

2016, செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி மாலை 2.30 மணிக்கு மேற்படி பெயரிடப்பட்ட எதிராளியின் ஆதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பிஸ்கல் ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும்.

ஏலம் முடிந்தவுடன் உத்தேச கொள்வனவாளர் விற்பனை விலையின் 25% தொகையும், நீதிமன்றத்தால் அனுமதிக் கப்பட்டுள்ள கட்டணங்கள் படி அரசாங்க கட்டணங்களும், விற்பனை தொகையிலிருந்து 25 % மான ஏலதாரரின் தரகு பணமும், உள்ளூராட்சி சபைக் கட்டணங்கள், ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு செலவுகளும் ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும். மேலும் கொள்வனவாளரால் மிகுதி 75% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் அவ் வழக்குக்கு பற்றாக குறித்த கொழும்பு நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட வேண்டியதுடன், அதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய இரு பிணையாட்களை அதே தருணத்தில் முன்வைத்து விற்பனை நிபந்தனைகளுக்கு கையொப்பமிட வேண்டும்.

### மேற்படி அட்டவணை

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் ஹேவாகம் கோரளை, அதிகாரி பத்து கொடிகாவத்த, முல்லேரியாவ பிரதேச சபை எல்லையில் முல்லேரியா, ஹீனடிகும்புர வீதியில், இல. 44/ 45 இல் அமைந்துள்ள கல்பொத்தேஒவிட்ட மற்றும் தவடகஹலந்த அல்லது தெனிபிம என்ற காணிக்கு அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஜெகதீசன் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1951.03.06 ஆம் திகதிய 805 என்ற வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 4 என்ற இருபது தசம் நான்கு ஐந்து பேர்ச்சஸ்(0ஏ.0றூ. 20.45பேர்.) என்று காட்டப்பட்டுள்ள காணித் துண்டுக்கு எல்லைகள்- வடக்கு: குறித்த காணியின் துண்டு 5; கிழக்கு: ஏ. தியோனிஸ் பெரேராவுக்கு சொந்தமான தவடகஹலந்த; தெற்கு: குறித்த காணியின் துண்டு 01 மற்றும் 02( மிகவும் சரியான வகையில் அது அக் காணியின் துண்டு 03) மற்றும் மேற்கு: துண்டு பீ (ரோட்டுக்கான ஒதுக்கீடு) என்ற காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள மரங்கள், பழங்கள், கட்டிடங்கள் கொண்ட சகலதும் . இக் காணி கொழும்பு காணி பதிவகத்தில் F 63/99 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி காணி மீண்டும் அளக்கப்பட்டு பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோரளை, அதிகாரி பத்து கொடிகாவத்த முல்லேரியா பிரதேச சபை எல்லையில் முல்லேரியால, ஹீனடிகும்புர வீதியில், இல. 44/ 45 இல் அமைந்துள்ள கல்பொத்தேஒவிட மற்றும் தவடகஹலந்த அல்லது தெனிபிம என்ற காணிக்கு அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். திக்கும்புர அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 2013.07.16 ஆம் திகதிய 2488 என்ற வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 4 ஏ என்ற இருபது தசம் நான்கு ஐந்து பேர்ச்சஸ்(0ஏ.0றூ.20.45 பே.) என்று காட்டப்பட்டுள்ள காணித்துண்டுக்கு எல்லைகள்- வடக்கு: குறித்த வரைபட இல. 805 படி துண்டு 5; கிழக்கு: தவடகஹலந்த; தெற்கு: வரைபட இல. 205 படி துண்டு 03 மற்றும் மேற்கு: வரைபட இல. 805 படி துண்டு பீ( 20 அடி ரோட்டு ) என்ற காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள மரங்கள், கட்டிடங்கள் கொண்ட சகலதும்

### மேற்படி இரண்டாம் அட்டவணை

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் ஹேவாகம்

கோரளை, அதிகாரி பத்து கொடிகாவத்த, முல்லேரியாவ பிரதேச சபை எல்லையில் முல்லேரியா, ஹீனடிகும்புர வீதியில், இல. 44/45 இல் அமைந்துள்ள கல்பொத்தேஓவிட்ட மற்றும் தவடகஹலந்த அல்லது தெனிபிம என்ற காணிக்கு அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஜெகதீசன் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1951.03.06 ஆம் திகதிய 805 என்ற வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள ஏ (வீதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது) என்ற இருபத்தி இரண்டு தசம் நான்கு சைபர் பேர்ச்சஸ்( 0ஏ.0றூ. 22.40பேர்.) என்று காட்டப்பட்டுள்ள காணித் துண்டுக்கு எல்லைகள்- வடக்கு: துண்டு 34 மற்றும் டீ; கிழக்கு:துண்டு 1, 20, 21, 34 மற்றும் 41 சீ; தெற்கு: வீதி மற்றும் மேற்கு: துண்டு 23 தொடக்கம் 33 வரை என்ற காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள மரங்கள், பழங்கள், கட்டிடங்கள் கொண்ட சகலதும் . இக் காணி கொழும்பு காணி பதிவகத்தில் F 63/100 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் ஹேவாகம் கோரளை, அதிகாரி பத்து கொடிகாவத்த, முல்லேரியாவ பிரதேச சபை எல்லையில் முல்லேரியா, ஹீனடிகும்புர வீதியில், இல. 44/45 இல் அமைந்துள்ள கல்பொத்தேஓவிட்ட மற்றும் தவடகஹலந்த அல்லது தெனிபிம என்ற காணிக்கு அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஜெகதீசன் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1951.03.06 ஆம் திகதிய 805 என்ற வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள பீ (வீதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது) என்ற ஒரு றூட் ஏழு தசம் ஐந்து பேர்ச்சஸ்( 1ஏ.0றூ. 7.5பேர்.) என்று காட்டப்பட்டுள்ள காணித் துண்டுக்கு எல்லைகள்- வடக்கு: துண்டு சீ; கிழக்கு:துண்டு 1, 2, 3, 4 மற்றும் 14 ; தெற்கு: துண்டு ஏ மற்றும் மேற்கு: துண்டு 34 மற்றும் 42 தொடக்கம் 47 வரை என்ற காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள மரங்கள், பழங்கள், கட்டிடங்கள் கொண்ட சகலதும் . இக் காணி கொழும்பு காணி பதிவகத்தில். F 63/101 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் பிரிவு 503/பீ, ஹிம்புட்டான கிழக்கு ஆவதுடன், கொலன்னாவை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ளது.

பதிவுகாரர்/உதவி பிஸ்கல்,
மாவட்ட நீதிமன்றம்,
கொழும்பு 12.

2016, யூலை 14

7-1184